**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : MC 26/2023.**

**Prosecution witness : ம.சா. 2** **Date : 31.10.2025.**

| | |
|---|---|
| **Name : வாசுகி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது எடப்பாடி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையின் பேரில் ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியம் அளிக்கிறேன். ஆவணங்களின் விவரம் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் மோகன் ராஜ் எங்கள் நிறுவனத்தில் மின்பாதை ஆய்வாளராக கடந்த 2017 ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார். அவருடைய பணி அரசு நிரந்தர பணியாகும்.

2) அவருடைய ஓய்வு பெறும் தேதி 30.04.2034 ஆகும். அவருடைய மாத வருமானம் எவ்வளவு என்னவென்றால் மொத்தம் ரூ.1,10,000/- ஆகும். பிடிமானம் போக ரூ.68,923/-ஆகும். பிடிமானத்தில் ரூ.110/- குடும்ப நல நிதியாகவும், GPF ரூ.13,000/-, NHIS ரூ.300/-, SPF ரூ.50/-, LIC ரூ.1165/-, சொசைட்டி லோன் ரூ.22,475/- மற்றொரு LIC ரூ.1341/-, ரூ.1344/-,ரூ.1344/-, ரூ.510/-,உள்ளடங்கும். அவருடைய சம்பளம் குறித்த சான்றிதழ் 7/2025, 8/2025 மற்றும் 9/2025 ஆகியவை தனித்தனியாக pay slip உடன் இணைத்து மொத்தம் 6 பக்கங்களில் தாக்கல் செய்யப்படுகிறது. அது **ம.சா.ஆ.13** ஆகும். எதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் வேலைக்கு சேர்ந்தார் என்றால் வாரிசு அடிப்படையில் வேலைக்கு சேர்ந்தார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) அழைப்பாணையில் எந்த ஆவணம் கொண்டு வர சொல்லி எதுவும் இல்லை என்றால் ஆமாம். சாட்சியம் அளிக்க மட்டுமே சம்மன் பெறப்பட்டது என்றால் ஆமாம். சாட்சியம் அளிக்க எனக்கு உயர் அதிகாரிகள் அனுமதி கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் சாட்சியம் அளிக்க சொன்னார்கள். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) எதிர்மனுதாரர் கடன் வாங்க வேண்டுமென்றால் முன் அனுமதி பெற்று தான் வாங்க வேண்டுமென்றால் ஆமாம். சம்பள கடன் வங்கியில் வாங்க வேண்டுமென்றால் சம்பள பட்டியல் நகல் பெற்று தான் வாங்க வேண்டுமென்றால் எதிர்மனுதாரர் வசமே payslip இருக்கும். அதை வைத்து கடன் பெற்றுக் கொள்ளலாம். அதிகப்படியான கடன் வாங்கும் போது எங்கள் அலுவலகத்தில் முன் அனுமதி வாங்க வேண்டுமென்றால் இல்லை.

5) வருமான வரி பிடித்தம் மாதா மாதம் பிடிக்கப்படுகிறது. வருடத்தில் பிடிக்கப்படுகிறதா என்றால் வருடத்தில் மூன்று மாதம் பிடிக்கப்படுகிறது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சம்பள பிடித்தம் செய்யப்படும். தோராயமாக ஆண்டுக்கு எதிர்மனுதாரருக்கு எவ்வளவு வருமான வரி பிடித்தம் செய்யப்படும் என்றால் ரூ.1,60,000/– பிடிக்கப்படும். இதனால் அவருக்கு 3 மாத சம்பளம் வழங்கப்படாது என்றால் ஆமாம்.

6) ஏற்கனவே எதிர்மனுதாரர் இருதய அறுவை சிகிச்சை செய்து அதற்கான மருத்துவ செலவினங்களை பெற்றுள்ளாரா என்றால் அதற்கான மருத்துவ செலவினங்களை அலுவலகம் மூலம் பெறவில்லை. எதிர்மனுதாரரின் மனைவி கோவிடால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிட் சிகிச்சையின் போது மருத்துவ காப்பீடு மூலம் பணம் கிடைக்கும் என்றால் கிடைக்காது.

7) எதிர்பாராத செலவுகளுக்கு எதிர்மனுதாரர் சம்பளம் மற்றும் கடன் தொகையிலிருந்து நிவர்த்தி செய்து கொள்வார் என்றால் ஆமாம். சம்பள தொகையை நேரடியாக செலுத்துவோமா என்றால் வங்கி கணக்கு மூலமாக

செலுத்துவோம். எந்த வங்கி மூலமாக சம்பள பணம் செலுத்துவோம் என்றால் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் செலுத்துவோம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**